**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் பாதிப்பிற்குப் பின்னரான பகுதிகளில் சமுதாய அடிப்படை கிராமிய நீர்வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்ற செயற்திட்டம் - 2014**

---

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் பாதிப்பிற்குப் பின்னரான பகுதிகளில் சமுதாய அடிப்படை கிராமிய நீர்வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்ற செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய ஜேஎவ்பிஆர் 9154 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 11(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

---

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கைகளின் படி, முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் நெடுந்தீவு பிரதேச சபை, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மற்றும் கரைச்சி பிரதேச சபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாவுள்ளது. முன்னேற்றப்பட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகள் ஊடாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வசிப்போர் மற்றும் உள்ளூரில் இடம்பெயர்ந்து திரும்பி வந்தோருக்கான பாதிப்பிற்குப் பின்னரான சமூகங்களின் வறுமையை குறைத்து வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் ஆரம்ப குறிக்கோளாக உள்ளது. மானிய உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 268.26 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2.42 மில்லியனானதுடன் அதில் ரூபா 221.70 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2 மில்லியன் அல்லது மொத்த கிரயத்தில் 83 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கி ஊடாக வறுமை குறைப்பிற்கான ஜப்பான் நிதியத்தால் (ஜேஈபிஆர்) நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 28.82 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.26 மில்லியன் அல்லது மொத்தக் கிரயததில் 11 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 17.74 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.16 மில்லியன் அல்லது மொத்தக் கிரயததில் 6 சதவீதம் சமூக பங்களிப்புகள் ஊடாக நிதியளிக்கப்பட வேண்டும். செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 ஆகஸ்ட் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2014 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்ட காலப்பகுதி 2015 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## 1.4. கணக்காய்வாரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்தான கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) முன்னைய ஆண்டிற்கான எனது கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஒப்பந்தகாரர்களிற்கு செய்யப்பட்ட ரூபா 25,968,919 தொகையான நேரடிக் கொடுப்பனவுகள் மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் சிவில் நடைபெறும் வேலைகளின் பெறுமதி ரூபா 4,501,789 ஆகும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், இது ரூபா 167,575,861 ஆக காட்டப்பட்டிருந்தது. ரூபா 163,074,072 ஆன வித்தியாசம் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 06 மாதங்களிற்குள் நன்கொடை முகவருக்கு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்த போதிலும், 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயறற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 28 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| மானியம் | 2.00 | 221.70 | 130.00 | 0.64 | 83.42 | 1.18 | 145.17 |
| இலங்கை அரசாங்கம் | 0.26 | 28.82 | 11.00 | 0.09 | 11.38 | 0.18 | 22.41 |
| சமுதாய பங்களிப்பு | 0.16 | 117.74 | - | - | - | - | - |
| | 2.42 | 268.26 | 141.00 | 0.73 | 94.80 | 1.36 | 167.58 |

செயற்திட்டத்திற்கான சமுதாய பங்களிப்பின் பெறுமதி மானிய அமுலாக்கல் கைநூலில் ரூபா 17.74 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.16 மில்லியனாக இனங்காணப்பட்டிருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக நலனாளிளால் செய்யப்பட்ட பங்களிப்பின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றங்கள் முறையே 75 சதவீதம் மற்றும் 57 சதவீதமாக இருந்தது. மானிய அமுலாக்கல் கைநூலின் பிரகாரம், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள 1,900 அலகுகளுக்கு பாதுகாப்பான குடிதண்ணீரை வழங்குவதற்கு எதிர்பாரக்கப்பட்டிருந்தது. பின்னர், 2,535 வீடுகளிற்கு விரிவாக்கப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது நெடுந்தீவு நீர் வழங்கல் திட்டம் பூர்த்தியாக்கலிலுள்ள தாமதம் அக்கராயன் நீர் வழங்கல் திட்டத்தின் குறைந்த தண்ணீர் தரத்திலுள்ள பிரச்சினைகள் என்பன காரணமாக 2015 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு 875 வீட்டுரிமையாளர்களிற்கு பாதுகாப்பான குடிதண்ணீர் வழங்கப்பட்டிருந்தது. மேலும், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் சுகாதார வசதிகள் சுகாதார மற்றும்

பாராமரிப்பு வசதிகள் வழங்கும் கூறின் கீழ் 611 வீட்டுரிமையாளர்களிற்காக வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 301 வீட்டுரிமையாளர்களிற்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், நெடுந்தீவு நீர் வழங்கல் திட்டமானது 2014 யூலையில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 4.81 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட தண்ணீர் கோபுரம் நாட்டில் நிலவிய காலநிலை காரணமாக 2014 ஆகஸ்ட் 08 இல் சேதமடைந்திருந்தது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழு மண் புலனாய்வு, குறைவான தொழிலாளர் தீர்வு மற்றும் நிலத்தடி நீர் அட்டவணை ஏற்றவிறக்கம் என்பன இல்லாத இடத்தெரிவே அழிவிற்கான பிரதான காரணமாக உள்ளதென இனங்காணப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது செயற்திட்டத்திற்கு மேலதிக கிரயம் ஏற்படாமல் அதே ஒப்பந்தகாரர் மூலம் இன்னொரு நீர் கோபுரத்தை நிர்மாணிப்பதற்கு வேறொரு இடத்தை தெரிவு செய்வதற்கு 2015 சனவரியில் நடவடிக்கை எடுத்திருந்தது. பின்னர் நிர்மாண வேலைகள் 2015 செப்தெம்பரில் பகுதியளவில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(ஆ) மேலதிக வேலைகளாக செயற்திட்டத்தின் இறுதி கட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த அக்கராயன் நீர் வழங்கல் திட்டத்திற்கான அந்த நிர்மாண வேலைகள் தொடங்குவதற்கு முன்னர் குடி தண்ணீரின் தரம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது. தண்ணீர் கோபுரம் மற்றும் நீர் தேக்க கிணறு என்பவற்றின் நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்காத அதேநேரம் நாட்டும் தூண்களின் நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை என்று 2015 செப்தெம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு கள வருகைகளில் அவதானிக்கப்பட்டது. மேலும், மக்னீசியம் மற்றும் பெற்றேசின் உயர்ந்த சதவீதத்தை கொண்டுள்ள தண்ணீர் குடிதண்ணீருக்கு பொருத்தமற்றதாக இருந்ததென வெளிப்பட்டது. பிரச்சினையை குறைப்பதற்கு மேலதிக சுத்திகரிப்பு நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது அமுலாக்கப்பட்ட வேலைகள் கணக்காய்வு களவருகைக் காலத்தில் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.